Published on 14, Jan-2025 ISSN: 3049-2688 (Online)

# கவிஞர் மு. மேத்தாவின் ஊர்வலம் படைப்பில் வறுமை சித்திரிப்பு

முனைவர் ரெ. ராதிகா
உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி
பெரம்பலூர் 621 113

நமது நாடு பல்வேறு சமுதாயங்களால் பின்னப்பட்ட ஓர் அமைப்பாகும். இந்தச் சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதர்களும் அங்கம் வகிக்கின்றனர். பொதுவாக மனிதர்களின் வாழ்க்கை நிலை சமுதாயத்தோடு நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது. நாளடைவில் சமுதாயங்களை நோக்கும் போது தனக்கே உரிய இயங்கியலைக் கொண்டிருப்பதை உணரலாம். அத்தகைய நகர்வில் வறுமை முக்கியப்பங்கு வகிப்பதைக் காண முடிகிறது. இவ்வறுமையைப் பற்றி கவிஞர் மு. மேத்தா தனது ஊர்வலம் படைப்பில் எவ்வாறெல்லாம் வெளிக்காட்டியுள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

### சமுதாயம் வரையறை

சமுதாயம் என்பது தனிமனிதர் பலர் ஒன்று சேர்ந்து வாழும் ஓர் கட்டமைப்பாகும். இவ்வமைப்பில் ஒவ்வொரு தனிமனிதனும் உறுப்பினன் ஆவான். நாகரிகம் அடையாத மனிதன் தொடக்கத்தில் தனித்தனியாக வாழ்ந்து வந்தான். இயற்கையின்பால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக சிறுசிறு குழுவாக இணையத் தொடங்கினான். குழுவாக இணைந்து இயற்கைப் போராட்டங்களை எதிர்க்கையில் எதிர்பார்த்த வெற்றியினை அடைய முடிந்தது. குழுவாக இருந்த மனிதன் கூட்டமாக வாழத் தொடங்கினான். பல குடும்பங்கள் சேர்ந்து ஒட்டு மொத்த அமைப்பு சமுதாயமாக மாறிற்று. இதனைச் சமுதாயம் என்றும் கூறுவர். சமுதாய அமைப்பில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையைச் செவ்வனே நகர்த்தும் வேண்டியிருக்கிறது. வேளைகளில் பல்வேறு இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. நம்நாட்டுச் சமுதாய வாழ்க்கையில் மேலை நாட்டுக் கலாச்சாரங்களின் தாக்கம் நம்மிடையே பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. **சமுதாயமும் கவிஞனும்**

சமுதாயத்தில் அன்றாட வாழ்வில் நாம் காணும் பல்வேறு அவலங்களைக் கவிஞனும் காண நேரிடுகிறது. தான் கண்ட சமுதாய அவலங்களைத் தன் கவிதைகள் மூலம் பதிவு செய்து வெளிப்படுத்தி மக்களை விழிப்படையச் செய்யும் பெரும் பொறுப்பு கவிஞனுக்கு உண்டு.

**“கவிஞர் என்பவர் காட்டிலோ, குகையிலோ, தன்னந்தனியே வாழ்ந்துவரும் சித்தர் அல்லர். சமுதாயத்தில் மக்களோடு மக்களாய் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வரும் ஓர் உறுப்பினரே ஆவார். எனவே, அவரது கவிதைகளில் சமுதாய நிகழ்வுகளின் பதிவு, சமுதாய அவலங்களின் தாக்கம், சமுதாய நலன்களின் மீதான அக்கறை, புதிய சமுதாயம் பற்றிய சிந்தனைகள் கட்டாயம் இருந்தே தீரும்”**[1] என்ற அறிஞரின் கருத்து இங்கு சிந்திக்கத் தக்கதாகும். கவிஞன் தான் காணும் சமுதாய நிகழ்வுகளையே கவிதையாக்குகிறான். சமுதாயத்திலிருந்து தான் பெற்ற அனுபவங்களை வெளியிடுவதோடு, சில சமயங்களில் பிரச்சனைகளால் நேரும் அவலங்களையும் கவிஞன் வெளிப்படுத்தி வருகிறான் என்பதைப் பல்வேறு கவிதைகள் உணர்த்தி வருகின்றன.

**“சமுதாய நோக்கோடு பாடப்பட்ட கவிதைகளில் மக்களின் நிலை, அவர்களின் போக்கு, அவர்தம் பொருளாதாரம், அரசியல் போன்ற நாளும் வாழ்வோடு தொடர்புடைய கூறுகளே அதிகம்”**[2] என்ற அறிஞரின் சிந்தனை இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும். சமுதாயத்தில்

நிலவும் பல்வேறு அவல நிகழ்வுகள் மக்களை எந்தெந்த வகைகளில் பாதிப்புக்கு உள்ளாக்கி வருகின்றன என்பதனைப் படம்பிடித்துக்காட்டி வருவதில் புதுக்கவிதைகள் முன்னணியில் விளங்குகின்றன.

## கவிஞர் மு. மேத்தாவின் கவிதைகளில் வறுமைச் சிக்கல்கள்

நம் சமுதாயத்தில் மக்களின் இயல்பான வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

தனது கவிதைகளைப் பற்றி மு.மேத்தா குறிப்பிடுகையில், **"கவிதை என்பது தனி மனிதனுடையதுதான் என்றாலும் அதில் உள்ள வேகம், அல்லது சோகம், அந்தக் கவிதையில் ஏற்படுகின்ற பெரியநெருப்பு அல்லது சிறிய பனிக்கட்டி - இதைக் கொடுப்பது சமூகமே"**[3] எனக் குறிப்பிடுதல் நோக்கத்தக்கதாகும்.

## அன்றாட வாழ்வில் நிகழும் அவலங்கள்

சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைச் சூழலும் பல்வேறு எதிர்பார்ப்புகள் நிறைந்ததாகவே அமைந்திருக்கின்றன. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பல்வேறு சூழ்நிலைகள் அவனது வாழ்க்கைப் போக்கை மாற்றும் காரணிகளாகிவிடுகின்றன. இத்தகைய மாற்றங்களுக்குப் பெரும்பாலும் சமூக அவலங்களே முதன்மைக் காரணமாக அமைந்து விடுகின்றன.

**"மேத்தாவின் கவிதைகளில் தனிமனித உணர்வுகள் சில சமயங்களில் வெளிப் பட்டாலும், பெரும்பாலான இடங்களில் சமூகவியல் தொடர்பான நிகழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டே பாடுகின்றார்"**[4] என்ற அறிஞரின் கருத்தும் நோக்கத்தக்கதாகும். அவ்வகையில் கவிஞர் மு.மேத்தாவின் கவிதைகளில் காணப்பெறும் மக்களின் வாழ்க்கைச் சூழலையும், அவல நிகழ்வுகள் பற்றியும் மு.மேத்தாவின் ஊர்வலம் கவிதைத் தொகுப்பில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

## வறுமை நிலை

சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உலகுக்கு உணர்த்தும் பணி உன்னதமானது. அதனைச் செய்யாதவன் நல்ல கவிஞனில்லை. வாழ்கின்ற காலத்தில் உண்டாகும் மாற்றங்களை இயற்றும் கவிஞனே காலத்தை வென்ற கவியாகின்றான்.

நாட்டின் வறுமை நிலை மாற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட கவிஞன். மகாத்மா பற்றிய பாடலில்,

**"அமுத சுரபியைத்தான்**

**நீ**

**தந்து சென்றாய்**

**இப்போது**

**எங்கள் கையில் இருப்பதோ**

**பிச்சைப் பாத்திரம்"**[5]

என்று சுதந்திரமடைந்தும் நாட்டின் நிலை மாறாததைச் சுட்டுகின்றார். சுதந்திரம் பெற்ற பொழுது அமுத சுரபியாக இருந்த நாடு அரசியலால் பிச்சைப் பாத்திரமாக ஆகி விட்டது எனக் கூறுகிறார்.

சுதந்திரச் சிந்தனைகள் என்ற தலைப்பில் வறுமை நிலை குறித்துச் சாடியுள்ளார்.

**"வானத்தை நரைமுடியால்**

**வருடுகின்ற இமயமலை**

**நாணத்தை ஏந்தி**

**நடைபயிலும் கங்கைநதி**

**அலைச்சேலை கட்டிக் கொண்டு**

**ஆடுகின்ற முக்கடல்கள்**

**என்ன இருந்தென்ன?**

**என்ன இருந்தென்ன**

**எங்களது கண்களுக்கு**

**வயிறே தெரிகிறது - எங்கள்**

**வாழ்வே எரிகிறது"**[6]

என்று வெளிப்படுத்துகிறார்.

வறுமை நிலைக்கு முக்கியக் காரணமாக மக்கள் தொகைப் பெருக்கமே இருக்கிறது என்பதை உணர்த்தி,

**"கருப்பை வீடுகளில்**

**குசேலக் கொடிகள்**

**பறக்கக் கூடாதென்றுதான்**

*பாரத தேசமே பயப்படுகிறது"*[7]

என்றும், இப்படியே நிலைமை நீடித்தால்,

*"பாரத கண்ண பரமாத்மாக்கள்*

*காணப் பெண்களிடம்*

*கருப்பைகளைக்*

*கழற்றிக் கொடுத்துவிடுமாறு*

*யாசிக்கிற*

*காலம் வரும்"*[8] என்றும் குமுறுகிறார்.

தேசிய கீதம் விழாக்களை நிறைவு செய்யும் போது பாடினால் மட்டும் போதாது என்று கூறி அதனை அதிகமாய் நேசிக்கும் காலத்தையும் குறிப்பிடுகிறார்.

*"எப்போது*

*இந்தியா*

*தன் பிரச்சினைத்*

*துயரங்களுக்கெல்லாம்*

*ஜனகணமன பாடுகிறதே...*

*அப்போதுதான் அதை*

*அதிகமாய் நேசிப்பேன்"*[9]

என்று தாய்நாடு எல்லா நிறைவினையும் பெறும்பொழுதுதான் தன்னால் நேசிக்கப் படும் என எடுத்துரைக்கிறார்.

*"தனி ஒருவனுக்கு உணவில்லை*

*எனில் செகத்தினை அழித்திடுவோம்"*[10]

என்றார் பாரதியார்.

நம் சமுதாயத்தைப் பிடித்துள்ள பல்வேறு அவலங்களில் வறுமை முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. வறுமை பற்றி மதிப்பிடும் மா. இராமலிங்கம்,

*"வறுமை தனி மனிதப் பிரச்சனை*

*அன்று சமூகப் பிரச்சனை"*[11] எனக் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

சமுதாயத்தில் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் மக்களின் நிலையைக் கவிஞர் மு.மேத்தாவின் கவிதைகள் படம் பிடித்துக் காட்டியுள்ளன.

கவிஞர் மு. மேத்தாவின் வறுமை வெளியேறுமா? என்னும் கவிதை வறுமையை உழைப்பினால் மட்டுமே வெளியேற்ற முடியும் என்பதை எடுத்துரைக்கின்றது.

*"வெளியேறு வெளியேறு*

*என்றால்*

*எருமையே வெளியேறாது*

*வறுமையா வெளியேறும்?*

*போடு போடு என்றால்*

*மயில் — இறகு போடாது*

*போடு போடு என்று*

*போட்டால்தான் போடும்"*[12]

என்ற வரிகள் சமுதாயத்தில் வறுமைநிலை இல்லையென்ற நிலை ஏற்பட வேண்டுமென்பதை உணர்த்துகிறது.

## முடிவுரை

இந்திய நாட்டில் பெரும்பாலான மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ளாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். சமுதாயத்தில் வறுமைநிலை இல்லையென்ற நிலை ஏற்பட வேண்டுமென் றால் வெறும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. இடைவிடாது முயன்றால் மட்டுமே வறுமை நிலையை வெளியேற்ற முடியும் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

## சான்றெண் விளக்கம்

1. இரா. மோகன் காந்தியக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல்,பக். 64-65
2. இல. செ. கந்தசாமி, புதுக்கவிதை ஒரு பார்வை, ப. 13
3. மு. மேத்தா, இதய வாசல்,ப. 61
4. க. இராமச்சந்திரன், மு.மேத்தா கவிதை களில் சமுதாயப் பார்வை, ப, 80
5. மு. மேத்தா, கண்ணீர்ப்பூக்கள், ப. 24
6. மு. மேத்தா, ஊர்வலம், ப. 10
7. மேலது, ப. 117
8. மேலது, ப. 117
9. மேலது, ப. 33
10. பாரதியார், பாரதியார்கவிதைகள், பா.321
11. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், 162
12. மு.மேத்தா, ஊர்வலம்,ப.89